இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற் கான இலங்கை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்)

கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலிப் வெத ஆரச்சி அவர்களால் 2013, யூன் மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2013, மே மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[**248 ஆம் சட்டமூலம்**]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 11.00 **தபாற் செலவு : ரூபா 5.00**

கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்பு வதற்கான இலங்கை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்)

கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்பு வதற்கான இலங்கை கலாசார மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை

2-PL 007326 -350 (2013/06)

ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றம்'' என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) மனிதனுக்கு முகம்கொடுக்க நேரிடும் துன்பங்களைத் தடுக்கும் உதவிச் சேவைகளைச் செய்வதற்காக தைரியமும் ஊக்கமும் அளித்தல் ;

(ஆ) சகல நாடுகளிலும் கலாசார சேவைகளின் பொருட்டு சங்கங்களை நிறுவுதலும் அவற்றை விருத்தி செய்தலும், அதற்கான ஊக்குவிப்பு, மேம்பாடு மற்றும் அத்தகைய அமைப்புகளில், பிரதான அமைப்பின் கொள்கைகளை மீள் சீரமைத்தல் ;

(இ) தேசிய, சர்வதேச மற்றும் பிரதேச மட்டங்களில் முன் அனர்த்த தயார் நிலைக் கருத்திட்டங்களை ஒழுங்கு செய்வதோடு, அவற்றுக்கு உதவி அளித்தல் ;

(ஈ) சமூக சேவைகள், கலாசார மறுசீரமைப்பு நடவடிக்கை களுக்கும், ஆளுமை விருத்திக்கும் அவசியமான வளமூலங்களைத் தயாரித்தலும் ஈடுபடுத்தலும் ;

(உ) சகல இனத்தவரையும் சமமாகக் கருதுவதோடு, அவர்களுடைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல்,

பிழையான வழிகளில் செல்லும் கலைஞர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்குப் பாதுகாப்பளித்தல் மற்றும் மன்றத்திற்கு இயலுமானவாறு அவர்களுக்கு நிவாரண சேவைகளை வழங்குதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்களுக்கு அமைய தேசிய சங்கங்கள் மற்றும் சமூக சங்கங்களுடன் ஒன்றிணைந்து சர்வதேச நிவாரண சேவை செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல், இணைப்பாக்கம் செய்தல் மற்றும் செயற்படுத்தல் ;

(எ) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் வினைத்திறனுடன் ஒழுங்கமைப்பு உள்ளடக்கம் மற்றும் தகவல்களை விநியோகிக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் ;

(ஏ) சர்வதேச, தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலுள்ள திறமையும் ஆற்றலும் பொருந்திய கலைஞர்களுக்குத் திறமைச் சான்றிதழ்கள், ஊக்குவிப்புச் சான்றிதழ்கள், விருதுகள், ஊக்குவிப்பு விருதுகள், கௌரவ பட்டமளித்தல், கலைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் மற்றும் அவர்களுக்கு அதற்கவசியமான பின்னணியை உருவாக்குதல் மற்றம் தொடர்ச்சியாகக் கொண்டுநடாத்துதல் ;

(ஐ) தேசிய ஒழுங்கமைப்புகள் மற்றும் பிரதேச ஒழுங்கமைப்புகளுடன் கலாசார நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் வெப் தளமொன்றை அமைத்து பேணிவருதல் ;

(ஒ) தனவந்தர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல், அவர்களுடைய உதவியுடன் ஏனைய ஒழுங்கமைப்புகளுடன் தொடர்புகளை விருத்தி செய்தல்;

(ஓ) சமூக கலாசார சேவைகளின் பொருட்டு மன்றத்தில் உறுப்பாண்மை வகிக்கும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டையொன்றை விநியோகித்தல் மற்றும்

அவர்கள் பெருமைக்குரிய பிரசைகளாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வலுவளித்தல் ;

(க) சமூக ரீதியான ஒழுங்கமைப்புக்களுக்கிடையே நட்பு, உள்ளார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தி அத்தகைய சங்கங்களுடன் இணைப்பாக்கத்தை உருவாக்கல் ;

(ங) பல்வகைமை இனப்பிரிவுகளுக்கு மனிதத் தன்மையின் முக்கியத்துவத்தை உணரவைத்தல், கலாசாரத்தின் மூலம் எமது நாட்டில் முன்னைய ஸ்ரீ விபூதியை மீண்டும் மீட்டல், அதன் மூலம் நலமடைய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பு செய்தல் ;

(ச) உசிதமான எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதத் தன்மையுடன்கூடிய சட்டங்களைத் தயாரித்தல், அவற்றை மேம்படுத்தல் மற்றும் பிரபல்யமடையச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு கருத்துக்களைச் சமர்ப்பித்தல் ; அத்துடன்

(ஞ) மேலே குறிப்பிட்ட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானதும் விரும்பத்தக்கதும், இடைநேர்விளைவானதுமான ஏனைய எல்லாக் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர்/பணிப்பாளர் நாயகம், நிர்வாகச் செயலாளர், சிரேஷ்ட உபதலைவர், உபதலைவர், பிரதேச ஒழுங்கமைப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஆகியவர்களைக் கொண்ட உயர் குழு ஒன்றினால் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய முகாமை செய்யப்படல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் உள்ளது எது எப்படியிருப்பினும் திரு. நிமல் சந்தண வீரதுங்க கூட்டுத்தாபனத்தின் சீவியகால பணிப்பாளர் நாயகம் ஆதல் வேண்டுமென்பதோடு, அவருக்குப் பின்னர் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அவரை

பின்தொடர்பவரை அவர் பெயர் குறித்துரைத்தல் வேண்டும். அத்தகைய பின்னுறுபவரும் சீவியகால பணிப்பாளர் நாயகம் பதவியை வகிப்பவராவர்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

5. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகக் கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகக் கடன்களை எடுப்பதற்கும் அல்லது பெற்றுக் கொள்வதற்கும் ;

(ஆ) செலாவணிப் பத்திரங்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கைமாற்றக்கூடிய சாசனங்களை ஆக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பிடவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் மற்றும் வழங்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் மற்றும் முடிவுறுத்தவும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை முகாமைத்துவப் பேரவை பொருத்தமானதெனக் கருதும் வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(ஈ) உதவு தொகைகள், சந்தாப் பணங்கள், கொடைகள் நன்கொடைகள் மற்றும் எல்லாவகையிலுமான பரிசுகள் என்பவற்றைக் கோருவதற்கும் பெறுவதற்கும் ;

(உ) எவரேனும் ஆளுடன் அல்லது தனியார் சபையொன்றுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களுக்கு ஏற்புடைத்தான சட்டரீதியான நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது நிபந்தனைகளைப் பொறுப்

பேற்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் சேவை யாளர்களை நியமனஞ் செய்யவும், வேலையில் ஈடுபடுத்தவும், பதவி நீக்கஞ் செய்யவும் அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஊழியர்களைப் பயிற்று வித்தல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுடையவாறாகவும் நடைமுறைப்படுத்துவற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தினதும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத் தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகுப்பையும் சார்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்களைப் பதவி நீக்கஞ் செய்தல் ;

(ஆ) உயர் குழுவைத் தேர்ந்தெடுத்தல், அவர்களின் விலகல், பதவியைக் கைவிடல் அல்லது பதவியிலிருந்து அகற்றப் படுதல் மற்றும் உயர் குழுவின் அதிகாரங்கள், கருமங்கள் மற்றும் செயற்பாடுகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்களின் நியமனங்கள், அவர்களைச் சேவையிலிருந்து நீக்குதல் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் நடத்தை ;

(ஈ) உயர் குழு மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் உப குழுக்களின் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அத்தகைய கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல், வெற்றிடங்களை நிரப்புதல், கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினர்களின் தகைமைகளும் தகைமையீனங்களும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தல், முகாமை செய்தல் அத்துடன் அதன் நிதிகளின் கட்டுக்காப்பு.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு முந்திய தினத்தில் வலுவிலுள்ளதான மன்றத்தின் விதிகள் இச்சட்டத்தினதும் அல்லது வேறு எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வகையில் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவது போன்று அதே போன்ற கூட்டத்திலும், அதே போன்ற முறையிலும் திருத்தவும், மாற்றவும் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்பட உள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

7. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்க லாம்.

8. ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதன மெல்லாம் 6 ஆவது பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். இச்சட்டம் தொடங்குகின்ற திகதியன்று கழகத்திற்குச் சொந்தமாக விருக்கின்ற எல்லாச் சொத்துக்களும் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் நிதியம்.

9. (1) சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாக கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

10. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், செலவினங்களும் சொத்துக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப் படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது-

(அ) இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத் தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையி னால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவருமாகிய ஆளொருவர் ; அல்லது

(ஆ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றித ழொன்றைக் கொண்டிருக்கின்றவர்களுமான பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று;

எனப் பொருளாகும்.

11. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தன் மைத்தானதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.

12. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருப்பின் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படு தலாகாது. எனினும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை யொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு , அந்நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர்களிடையயே ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் ; அல்லது கைமாற்றப்படல் வேண்டும். கூட்டுத்தாப னம் கலைக்கப்படுகின்ற வேளையிலோ அதற்கு முன்னராகவோ கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்களால் அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் பற்றித் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

13. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்